*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் ~ பன்னாட்டு ஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *VI*, பதிப்பு *17* - ஏப்ரல் - ஜீன் 2019
*Formally UGC Approved Journal (64089), © Author*

# தொல்காப்பியச் சொல்லதிகார நூற்பாக்களின் அமைப்பும் அளவும் எண்ணிக்கையும்

**முனைவர். வி. சேகர்**
துணை முதல்வர் (பொறுப்பு) & தமிழ்த் துறைத்தலைவர்
பவ்டா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கொல்லியங்குணம், மயிலம்

**முனைவர் .வே. சிவமதி**
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்
பவ்டா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கொல்லியங்குணம், மயிலம்

***முன்னுரை***

*தொல்காப்பியச் சொல்லதிகார உரையாசிரியர்கள் ஒவ்வொருவரும் நூற்பா விளக்கும் முறையிலும் அவற்றை வகுத்துக் கொள்ளும் முறையிலும் தங்களுக்கென்று தனித்தனிக் கொள்கையினைக் கொண்டுள்ளனர். அவர்கள் தத்தம் உரைகள் செம்மையாக அமைய பல உரை நுட்பங்களைக் கையாண்டுள்ளனர். அவ்வகையில் அவர்கள் உரையில் இடம்பெற்றுள்ள நூற்பாக்களின் அமைப்பும் அளவும் எண்ணிக்கையும் என்பனவற்றை ஆராய இக்கட்டுரையானது முற்படுகிறது*

**நூற்பாக்களின் அமைப்பும் அளவும் எண்ணிக்கையும்**

தொல்காப்பியத்தில் தற்போது நூற்பாக்களின் அமைப்பு முறை மாறியுள்ளதைச் சுட்டி இது மூல நூலாசிரியர் காலத்திலேயே ஏற்பட்டிருக்க வேண்டும் என்று குறிக்கின்றார் கு.சுந்தரமூர்த்தி. (தொல் - சொல், தெய்வச்சிலையார் உரை, ஆராய்ச்சி முன்னுரை, ப.9)

இளம்பூரணர் அமைத்துள்ள நூற்பா அமைப்போடு ஒப்பிட்டுக் காணும்போது சொல்லதிகார பிற உரையாசிரியர்களின் உரையில், நூற்பாக்களின் அமைப்பிலும் அளவிலும் எண்ணிக்கையிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவர்கள் இளம்பூரணர் இரண்டு நூற்பாக்களாகக் காண்பதை ஒரு நூற்பாவாக அமைத்தும் ஒரு நூற்பாவாகக் காண்பதை இரண்டாக்கியும் நூற்பாக்களை இடமாற்றியும் அமைத்துள்ளனர்.

தொல்காப்பிய அமைப்பிலும் அளவிலும் எண்ணிக்கையிலும் மூலபாடத்திலும் அதிகம் மாற்றம் செய்தவர் தெய்வச்சிலையார் ஆவார். இவர் ஒன்பது இயல்களிலும் நூற்பாக்களின் எண்ணிக்கையிலும் அளவிலும் அமைப்பிலும் இளம்பூரணர், நச்சினார்க்கினியரிடமிருந்து வேறுபட்டுள்ளார். உரியியலில் நூற்பாக்களின் எண்ணிக்கையில் தெய்வச்சிலையார், சேனாவரையருடன் ஒன்றுபட்டாலும் நூற்பாக்களின் அளவிலும் அமைப்பிலும்

வேறுபட்டுள்ளார். மேலும் எஞ்சிய எட்டு இயல்களின் எண்ணிக்கையிலும் வேறுபட்டுள்ளார். தெய்வச்சிலையாருக்குப் பின் உரை எழுதியுள்ள கல்லாடனார் தான் எழுதிய ஏழு இயல்களிலும் நூற்பாக்களின் எண்ணிக்கையிலும் அளவிலும் அமைப்பிலும் வேறுபட்டுள்ளார். ஒவ்வொரு உரையாசிரியர்களும் இயல் வாரியாகக் கொள்ளும் நூற்பாக்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளன.

| வ.எண் | தொல்.சொல்.இயல் | இளம் | சேனா | தெய் | நச்சி | கல் | பழைய |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | கிளவியாக்கம் | 62 | 61 | 59 | 61 | 61 | 62 |
| 2. | வேற்றுமையியல் | 17 | 11 | 21 | 11 | 13 | 22 |
| 3. | வேற்றுமை மயங்கியல் | 35 | 34 | 33 | 35 | 35 | 33 |
| 4. | விளிமரபு | 37 | 37 | 36 | 37 | 37 | ழூ |
| 5. | பெயரியல் | 43 | 43 | 41 | 43 | 43 | ழூ |
| 6. | வினையியல் | 49 | 51 | 54 | 51 | 50 | ழூ |
| 7. | இடையியல் | 48 | 48 | 47 | 48 | 10 | ழூ |
| 8. | உரியியல் | 99 | 100 | 100 | 98 | ழூ | ழூ |
| 9. | எச்சவியல் | 66 | 67 | 61 | 67 | ழூ | ழூ |
|  | மொத்த நூற்பா எண்ணிக்கை | 458 | 463 | 452 | 463 | ழூ | ழூ |

* நூற்பாக்களின் எண்ணிக்கை கிடைக்கவில்லை

**ஒன்றாக்கல்**

ஒன்றுக்கு மேற்பட்ட நூற்பாக்களை ஒன்றாக்கிக் காணுதல் ஒன்றாக்கல் என்பதாகும். இளம்பூரணர் இரண்டு. மூன்று, நான்கு நூற்பாவாகக் கொண்டதைத் தெய்வச்சிலையார் ஒன்றாகக் கூறியுள்ளார். அவை வருமாறு,

| எண் | இளம். | தெய். |
|---|---|---|
| 1 | தொல்.சொல்.நூற்.28,29,30. | தொல்.சொல்.நூற்.28. |
| 2 | தொல்.சொல்.நூற்.63,64. | தொல்.சொல்.நூற்.60. |
| 3 | தொல்.சொல்.நூற்.78,79. | தொல்.சொல்.நூற்.80. |
| 4 | தொல்.சொல்.நூற்.83,84. | தொல்.சொல்.நூற்.84. |
| 5 | தொல்.சொல்.நூற்.111,112. | தொல்.சொல்.நூற்.111. |
| 6 | தொல்.சொல்.நூற்.119,120. | தொல்.சொல்.நூற்.118. |
| 7 | தொல்.சொல்.நூற்.183,184. | தொல்.சொல்.நூற்.181. |
| 8 | தொல்.சொல்.நூற்.186,187. | தொல்.சொல்.நூற்.183. |
| 9 | தொல்.சொல்.நூற்.265,266. | தொல்.சொல்.நூற்.266. |
| 10 | தொல்.சொல்.நூற்.315,316,317. | தொல்.சொல்.நூற்.318. |
| 11 | தொல்.சொல்.நூற்.438,439,440,444. | தொல்.சொல்.நூற்.436. |

மேலும் ஒரு சில நூற்பாக்களை மாற்றியமைத்துக் கூறுவதாலும் நூற்பாக்களின் எண்ணிக்கை மாறுபடுகின்றது. இது நூற்பா இடப்பெயர்ப்பு என்னும் பகுதியில் விளக்கப்படுகின்றது. இளம்பூரணர் இரண்டு (இளம்.சொல்.நூற்.48) வரிகளாகக் கூறுவதைத் தெய்வச்சிலையார் ஒரு (தெய்.சொல்.நூற்.48) வரிகளாகவும், ஒரு வரிகளாகக் (இளம்.சொல்.நூற்.347,353) கூறுவதைத் தெய்வச்சிலையார் இரண்டு (தெய்.சொல்.நூற்.348,354) வரிகளாகவும் கூறியுள்ளார். இதைப்போல் இளம்பூரணர் நான்கு வரியாகக் (இளம்.சொல்.நூற்.392,399) கூறுவதைத் தெய்வச்சிலையார் மூன்று (தெய்.சொல்.நூற்.393,400) வரிகளாக அடக்கிக் கூறியுள்ளார். இதனால் அளவு முறையில் வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன.

சேனாவரையரும் இரண்டு, மூன்று, நான்கு நூற்பாக்களாகக் கொள்வதைத் தெய்வச்சிலையார் ஒரே நூற்பாவாகக் கொள்கிறார். அவை வருமாறு,

| எண் | சேனா. | தெய். |
|---|---|---|
| 1 | தொல்.சொல்.நூற்.28,29,30. | தொல்.சொல்.நூற்.28. |
| 2 | தொல்.சொல்.நூற்.62,63. | தொல்.சொல்.நூற்.60. |
| 3 | தொல்.சொல்.நூற்.87,88. | தொல்.சொல்.நூற்.84. |
| 4 | தொல்.சொல்.நூற்.122,123. | தொல்.சொல்.நூற்.118. |
| 5 | தொல்.சொல்.நூற்.186,187. | தொல்.சொல்.நூற்.181. |
| 6 | தொல்.சொல்.நூற்.188,189. | தொல்.சொல்.நூற்.183. |
| 7 | தொல்.சொல்.நூற்.270,271. | தொல்.சொல்.நூற்.266. |
| 8 | தொல்.சொல்.நூற்.321,322,323. | தொல்.சொல்.நூற்.318. |
| 9 | தொல்.சொல்.நூற்.444,445,446,447. | தொல்.சொல்.நூற்.436. |

இவர் இளம்பூரணரைத் தழுவி நூற்பாவினை மாற்றியமைத்துள்ளார். ஆனால் இரண்டு இடங்களில் மட்டும் (தெய்.சொல்.நூற்.78,79), (தெய்.சொல்.நூற்.111,112) அவரிடமிருந்து வேறுபட்டுள்ளார். நச்சினார்க்கினியர் இரண்டு. மூன்று நூற்பாக்களாகக் கொள்வதைத் தெய்வச்சிலையார் ஒரே நூற்பாவில் அடக்கிக் கூறியுள்ளார். அவை வருமாறு,

| எண் | நச்சி. | தெய். |
|---|---|---|
| 1 | தொல்.சொல்.நூற்.28,29,30. | தொல்.சொல்.நூற்.28. |
| 2 | தொல்.சொல்.நூற்.63,64. | தொல்.சொல்.நூற்.60. |
| 3 | தொல்.சொல்.நூற்.88,89. | தொல்.சொல்.நூற்.84. |
| 4 | தொல்.சொல்.நூற்.116,117. | தொல்.சொல்.நூற்.111. |
| 5 | தொல்.சொல்.நூற்.124,125. | தொல்.சொல்.நூற்.118. |
| 6 | தொல்.சொல்.நூற்.183,189. | தொல்.சொல்.நூற்.181. |
| 7 | தொல்.சொல்.நூற்.191,192. | தொல்.சொல்.நூற்.183. |
| 8 | தொல்.சொல்.நூற்.273,274. | தொல்.சொல்.நூற்.266. |
| 9 | தொல்.சொல்.நூற்.321,322,323. | தொல்.சொல்.நூற்.318. |

இவர் இளம்பூரணர், சேனாவரையரைத் தழுவி நூற்பாக்களை மாற்றியமைத்துள்ளார். ஆனால் இரண்டு இடங்களில் (நச்சி.சொல்.நூற்.78,79), (நச்சி.சொல்.நூற்.438,439,440,441) இளம்பூரணரிடமும் ஓர் இடத்தில் (நச்சி.சொல்.நூற்.444,445,446,447) சேனாவரையரிடமும் வேறுபட்டுள்ளார்.

**இரண்டாக்கல்**

ஒரு நூற்பாவை இரண்டாக்கிக் காணுதல் என்பதாகும். இளம்பூரணர் ஒரு நூற்பாவாகக் கொண்டதைத் தெய்வச்சிலையார் இரண்டாகக் கருதுகிறார். அவை வருமாறு,

| எண் | இளம். | தெய். |
|---|---|---|
| 1 | தொல்.சொல்.நூற்.72. | தொல்.சொல்.நூற்.68,69. |
| 2 | தொல்.சொல்.நூற்.73. | தொல்.சொல்.நூற்.70,71. |
| 3 | தொல்.சொல்.நூற்.74. | தொல்.சொல்.நூற்.72,73. |
| 4 | தொல்.சொல்.நூற்.75. | தொல்.சொல்.நூற்.74,75. |
| 5 | தொல்.சொல்.நூற்.76. | தொல்.சொல்.நூற்.76,77. |
| 6 | தொல்.சொல்.நூற்.77. | தொல்.சொல்.நூற்.78,79. |
| 7 | தொல்.சொல்.நூற்.216. | தொல்.சொல்.நூற்.231,214. |
| 8 | தொல்.சொல்.நூற்.295. | தொல்.சொல்.நூற்.295,296. |
| 9 | தொல்.சொல்.நூற்.298. | தொல்.சொல்.நூற்.299,300. |
| 10 | தொல்.சொல்.நூற்.299. | தொல்.சொல்.நூற்.301,302. |
| 11 | தொல்.சொல்.நூற்.447. | தொல்.சொல்.நூற்.442,443. |

இவற்றைப்போல் சேனாவரையர் ஒரு நூற்பாவாகக் கருதுவதைத் தெய்வச்சிலையார் இரு நூற்பாக்களாக கொள்கின்றார். அவை வருமாறு,

| எண் | சேனா. | தெய். |
|---|---|---|
| 1 | தொல்.சொல்.நூற்.54. | தொல்.சொல்.நூற்.51,52. |
| 2 | தொல்.சொல்.நூற்.300. | தொல்.சொல்.நூற்.295,296. |
| 3 | தொல்.சொல்.நூற்.305. | தொல்.சொல்.நூற்.301,302. |

மேலும், சேனாவரையர் நான்கு (தெய்.சொல்.நூற்.398,405) வரிகளாகக் கொண்டதைத் தெய்வச்சிலையார் மூன்று (தெய்.சொல்.நூற்.393,400) வரிகளாகக் கொண்டுள்ளார்.

இதைப்போன்று நச்சினார்க்கினியர் ஒரு நூற்பாவாகக் கருதியதைத் தெய்வச்சிலையார் இரு நூற்பாவாகக் கூறியுள்ளார். அவை வருமாறு,

| எண் | நச்சி. | தெய். |
|---|---|---|
| 1 | தொல்.சொல்.நூற்.302. | தொல்.சொல்.நூற்.295,296. |
| 2 | தொல்.சொல்.நூற்.305. | தொல்.சொல்.நூற்.299,300. |
| 3 | தொல்.சொல்.நூற்.306. | தொல்.சொல்.நூற்.301,302. |
| 4 | தொல்.சொல்.நூற்.313. | தொல்.சொல்.நூற்.309,310. |

மேலும் நச்சினார்க்கினியர் மூன்று (நச்சி.சொல்.நூற்.65), நான்கு (நச்சி.சொல்.நூற்.398,405) வரிகளாகக் கூறுவதை இவர் முறையே இரண்டு (தெய்.சொல்.நூற்.61), மூன்று (தெய்.சொல்.நூற்.393,400) வரிகளாகக் கூறியுள்ளார்.

தெய்வச்சிலையாருக்குப் பின் உரை எழுதிய கல்லாடனார், தெய்வச்சிலையார் ஒரு நூற்பாவாகக் கொண்டதை இவர் இரண்டு, மூன்று நூற்பாக்களாகக் கொண்டுள்ளார். இவர் தெய்வச்சிலையாருக்கு முந்தைய உரையாசிரியரைப் பின்பற்றியுள்ளதே இதற்குக் காரணம் எனலாம்.

| எண் | தெய். | கல். |
|---|---|---|
| 1 | தொல்.சொல்.நூற்.28. | தொல்.சொல்.நூற்.28,29,30. |
| 2 | தொல்.சொல்.நூற்.60. | தொல்.சொல்.நூற்.63,64. |
| 3 | தொல்.சொல்.நூற்.80. | தொல்.சொல்.நூற்.84,85. |
| 4 | தொல்.சொல்.நூற்.84. | தொல்.சொல்.நூற். 89,90. |
| 5 | தொல்.சொல்.நூற்.111. | தொல்.சொல்.நூற்.117,118. |
| 6 | தொல்.சொல்.நூற்.118. | தொல்.சொல்.நூற்.125,126. |
| 7 | தொல்.சொல்.நூற்.181. | தொல்.சொல்.நூற்.189,190. |
| 8 | தொல்.சொல்.நூற்.183. | தொல்.சொல்.நூற்.192,193. |

தெய்வச்சிலையார் இரண்டு (தெய்.சொல்.நூற்.260,207) நூற்பாக்களாகக் கொண்டதைக் கல்லாடனார் ஒரே (கல்.சொல்.நூற்.216) நூற்பாவாகவும், தெய்வச்சிலையார் இரண்டு (தெய்.சொல்.நூற்.61) வரிகளாகக் கொண்டதைக் கல்லாடனார் மூன்று (கல்.சொல்.நூற்.65) வரிகளாகவும் கொண்டுள்ளார்.

இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் போன்றோர் 49-ஆவது நூற்பாவின் இறுதி வரியாக "உயர்திணை மருங்கினும் அஃறிணை மருங்கினும்" என்பதைக் கூறத் தெய்வச்சிலையார் இதனை 48-ஆவது நூற்பாவின் முதல் வரியாகக் கூறியுள்ளார். கல்லாடனாரும் 49-ஆவது நூற்பாவின் இறுதி வரியாகவே கூறியுள்ளார்.

**நூற்பா இடப்பெயர்வு**

இளம்பூரணர் நூற்பா அமைப்பினின்று மாறுபட்டு ஒரு நூற்பாவைச் சேனாவரையர் இடம் மாற்றம் செய்திருக்கிறார். அவ்விடமாற்றம் உரியியலில் நடைப்பெறுகிறது. இளம்பூரணர் "தெவுக் கொளற் பொருட்டே", "தாவே வலியும் வருத்தமு மாகும்", "தெவ்வும் பகையாகும்" (இளம்.நூற்.338,339,340) என முறையாக அமைத்ததைச் சேனாவரையர் "தாவே வலியும் வருத்தமு மாகும்", "தெவுக் கொளற் பொருட்டே, தெவ்வும் பகையாகும்"

(சேனா.நூற்.345,346) என இடம் மாற்றிக் கூறியுள்ளார்.

இளம்பூரணரும், மற்றவுரையாசிரியரும் எச்சவியலில்,

“இறப்பி னிகழ்வி னெதிர்வி னென்றாச்
சிறப்புடை மரபி னம்முக் காலமுந்
தன்மை முன்னிலை படர்க்கை யென்னு
மம்மூ விடத்தான் வினையினுங் குறிப்பினு
மெய்ம்மை யானு மிவ்விரண் டாகு
மவ்வா றென்பு முற்றியன் மொழியே”

எனவும்,

“எவ்வயின் வினையும் அவ்விய னிலையும்”

எனவும்,

“அவைதாந் தத்தங் கிளவி யடுக்குந வரினு
மெத்திறத் தானும் பெயர்முடி பினவே”

எனவும் கூறியுள்ள மூன்று (தொல்.சொல்.நூற்.421,422,423) நூற்பாக்களைத் தெய்வச்சிலையார் வினையியலில் 243,244,245-ஆம் நூற்பாக்களாக இடமாற்றிக் கூறியுள்ளளார்.

**அளவு சுட்டுதல்**

தெய்வச்சிலையார் கிளவியாக்கத்தின் முடிவிலும் வேற்றுமை மயங்கியலின் முடிவிலும் சூத்திரம் உட்பட உரையினது அளவைக் கிரந்த வகையால் சுட்டிச் சென்றுள்ளார். மற்ற இயல்களிலும் பிற உரையாசிரியர்களிடமும் இத்தகைய அளவு சுட்டும் தன்மை காணப்படவில்லை. சான்றுகள்,

1. ‘இவ்வோத்தினுள் சூத்திரம் உட்பட உரையினது அளவு கிரந்த வகையான் ஐந்நூற்று நாற்பது (ஐந்நூற்று அறுபது - இரண்டாவது ஏடு)’ (தெய்.கிளவி).
2. ‘இவ்வோத்தினுள் சூத்திரம் உட்பட உரையினது அளவு கிரந்த வகையான் முந்நூற்று முப்பது’ (தெய்.வேற்).
3. ‘இவ்வோத்தினுள் சூத்திரம் உட்பட உரையினது அளவு கிரந்த வகையான் நூற்று முப்பது’ (தெய்.விளி).

**முடிவுரை**

தொல்காப்பியச் சொல்லதிகார உரையாசிரியர்களிடையே காணப்படும் கால இடைவெளி என்பது நூற்றாண்டுக்கணக்கில் இருப்பதனால் தொல்காப்பியர் காலத்திற்கும் உரையாசிரியர்களின் காலத்திற்கும் இடையேயான கால இடைவெளிக்கேற்பவும் மொழி அமைப்பு சிதைந்தும் வளர்ச்சிப்பெற்றும் வந்துள்ளது.

இளம்பூரணர் அமைத்துள்ள நூற்பா அமைப்போடு ஒப்பிட்டுக் காணும்போது சொல்லதிகார பிற உரையாசிரியர்களின் உரையில், நூற்பாக்களின் அமைப்பிலும், அளவிலும், எண்ணிக்கையிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

இளம்பூரணரின் நூற்பா அமைப்பிலிருந்து மாறுபட்டுச் சேனாவரையர் உரியியலில் ஒரு நூற்பாவினையும் இடம் மாற்றிக் கூறியுள்ளார். தெய்வச்சிலையார், இளம்பூரணரும் மற்றவுரையாசிரியர்களும் எச்சவியலில் கூறிய மூன்று நூற்பாக்களை வினையியலில் இடம் மாற்றிக் கூறியுள்ளதைக் காணமுடிகிறது.

தெய்வச்சிலையார் கிளவியாக்கத்தின் முடிவிலும் வேற்றுமை மயங்கியலின் முடிவிலும் சூத்திரம் உட்பட உரையினது அளவைச் சுட்டிச் சென்றுள்ளதைக் காணமுகிறது.

**துணை நூற்பட்டியல்**


1. அரவிந்தன். மு.வை., உரையாசிரியர்கள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1995.
2. சிவலிங்கனார். ஆ., தொல்காப்பியம் சிறப்புப்பாயிரம், உரைவளம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1980.
3. சுந்தரமூர்த்தி. கு., தொல்காப்பியச் சொல்லதிகாரம், தெய்வச்சிலையர் உரை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருந்நெல்வேலி, 1979.